Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 29 12 - 06 - 94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 114

## இராணுவ இணைப்பதிகாரி கையொப்பமிட்ட அடையாள அட்டை

மட்டக்களப்பு நகரில் வதியும் பொதுமக்களில்இதுவரை பாதுகாப்பு அடையாள அட்டை பெறாதவர்கள் உடனடியாக தத்தம் கிராமசேவகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பாதுகாப்பு இணைப்பதிகாரி அலுவலகம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகிறது. பாதுகாப்பு அடையாள அட்டையை பெறுவோர் சோதனைச் சாவடிகளில் சோதனையின்றி விரைவாக செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மட்டுநகர் வீடுகளில் பாதுகாப்பு அடையாள அட்டை இல்லாதோர் மற்றும் பொலிஸ் நிலையத்தில் பதியாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5ஆம் பக்கம் பார்க்க)

# பேராசிரியர் துரைராசா காலமானார்

# மூன்று நாள் துக்கதினமாக பிரகடனம்

## இறுதிநாள் கதவடைப்புச் செய்யுமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிரபல கல்விமானும், முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தருமான பேராசிரியர் துரைராசா கொழும்பில் காலமானார். பேராசிரியரின் மறைவையொட்டி இன்று தொடக்கம் மூன்று நாட்களை துக்க தினமாக பிரகடனப் படுத்தியுள்ளதோடு, இறுதி நாளன்று பூரண கதவடைப்புச் செய்து பேராசிரியருக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துமாறும் தமிழ் மக்களிடம் விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.


அண்மைக்காலமாகக் கடும் சுகயீனமுற்றிருந்த பேராசிரியர் துரைராசா நேற்று கொழும்பு மருத்துவ மனை ஒன்றில் காலமானார். இவரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது

பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் தெரிவித்துள்ளதோடு, மூன்று நா[ட்கள்] துக்கதினம் அனுஷ்டிக்குமாறும் விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கே தருகின்றோம்.

பிரபல கல்விமானும், முன்னாள் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தருமான பேரா

( 5 ஆம் பக்கம் பார்க்க )



## பேராசிரியர் பற்றிய சில குறிப்புக்கள்

- ★ பிறந்த இடம்: இமையாணன், உடுப்பிட்டி.
- ★ பிறந்த திகதி: 10 - 11 - 1934
- ★ ஜூலை 1953 - ஜூன் 1957 - பொறியியல் பட்[டப்]

## பேராசிரியர் மறைவினால் குடாநாட்டில் சோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் துரைராசா

பகுதிகளில் சோக உணர்வுகளின் வெளிப்பாடுகளை அவதானிக்க முடிந்தது.

யாழ். பல்கலைக்கழக

### விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் ஒரு சிறுவன் பலியானார்.

எழுதுமட்டுவாள் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லத்துரை ரூபன் (வயது 12) என்றசிறுவனே மேற்படி விபத்தில் பலியானவராவார்.

(பா, நி)

## எமது ஆட்சி வந்ததும் மாகாணசபை ஒழிக்கப்படும்

### சுதந்திரக் கட்சி எம். பி தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசமைத்ததும் மாகாணசபைகள் ஒழிக்கப்படும் எனவும் சிறுபான்மையினருக்கு மாகாணசபையை விட சிறந்த முறை ஒன்று ஏற்படுத்தப்படும் எனவும் சுதந்திரக் கட்சி எம். பியான ஜி. எம். ஜெயரட்ண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பதவிக்கு வந்ததும் அரசியலமைப்பு மாற்றப்படும். ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற முறை கொண்டு வரப்படும் எனவும் அவர் கூறினார்.

## அரசை கவிழ்க்க சதி; 16 பேர் மீது குற்றச்சாட்டு


(கொழும்பு)

அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக 16 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1992 இல் அரசை கவிழ்க்க சதிசெய்ததாக 4 பிக்குமார் உட்பட 16 பேர் மீதுசட்டமா அதிபர் பாணந்துறை உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இவர்களில் அநேகர் பட்டதாரி மாணவர்களாவர்

( 5ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க ஐ. நா. படைகளை அழைக்க முயற்சி?



... தினமாக பிரகடனப் படுத்தியுள்ளதோடு, இறுதி நாளன்று பூரண கதவடைப்புச் செய்து பேராசிரியருக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துமாறும் தமிழ் மக்களிடம் விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாகக் கடும் சுகயீனமுற்றிருந்த பேராசிரியர் துரைராசா நேற்று கொழும்பு மருத்துவ மனை ஒன்றில் காலமானார். இவரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது

பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் தெரிவித்துள்ளதோடு, மூன்று நாள் துக்கதினம் அனுஷ்டிக்குமாறும் விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கே தருகின்றோம்.

பிரபல கல்விமானும், முன்னாள் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தருமான பேரா

( 5 ஆம் பக்கம் பார்க்க )

... தப்படும் எனவும் சுதந்திரக் கட்சி எம். பியான ஜி. எம். ...

... கொண்டு வரப்படும் எனவும் அவர் கூறினார்.

## அரசை கவிழ்க்க சதி; 16 பேர் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக 16 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1992 இல் அரசை கவிழ்க்க சதிசெய்ததாக 4 பிக்குமார் உட்பட 16 பேர் மீதுசட்டமா அதிபர் பாணந்துறை உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இவர்களில் அநேகர் பட்டதாரி மாணவர்களாவர்

( 5ஆம் பக்கம் பார்க்க )

## பேராசிரியர் பற்றிய சில குறிப்புக்கள்

- ★ பிறந்த இடம்: இமையாணன், உடுப்பிட்டி.
- ★ பிறந்த திகதி: 10 - 11 - 1934
- ★ ஜுலை 1953 - ஜுன் 1957 - பொறியியல் பட்டதாரி மாணவர், இலங்கைப் பல்கலைக்கழகம்.
- ★ ஜுலை 1957 - மார்ச் 1958 - குடியியற் பொறியியல் போதனாசிரியர், இலங்கைப் பல்கலைக் கழகம்.
- ★ ஏப்ரல் 1958 - ஆகஸ்ட் 1958 - கனிஷ்ட உதவிப் பொறியியலாளர், பகிரங்க வேலைப்பகுதி(P.W.D)
- ★ ஒக்ரோபர் 1958 - டிசம்பர் 1961 - கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், கலாநிதி பட்டத்துக்கான ஆய்வு
- ★ ஜனவரி 1962 - ஜுன் 1962 - உதவிபணி பொறிமுறைப் பொறியியலாளர், லண்டன்.
- ★ ஜுலை 1962 - குடியியற் பொறியியல் விரிவுரையாளர் நியமனம், சிறிலங்கா பல்கலைக்கழகம்.
- • செப்டெம்பர் 1969 - செப்டெம்பர் 1970 - விடுப்பில் பேராசிரியர் பணிவார்டலூ பல்கலைக்கழகம், கனடா.
- ★ டிசம்பர் 1971 - குடியியற் பொறியியல் பேராசிரியர் நியமனம், பேராதனை வளாகம், சிறிலங்கா பல்கலைக்கழகம்.
- ★ மே 1975 - செப்டெம்பர் - 1977 - பீடாதிபதி, பொறியியல் பீடம், பேராதனை வளாகம்.
- ★ ஒக்டோபர் 1977 - டிசம்பர் 1978 - விடுப்பில் பேராசிரியர் பணி, பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் கனடா.
- ★ பெப்ரவரி 1982 - பெப்ரவரி 1985 - பொறியியல் பீடப் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம் (முன்னாள் சிறிலங்காப் பல்கலைக்கழகம்)
- ★ 1985 முதல் - குடியியற் பொறியியல் பேராசிரியர் சிறிலங்கா திறந்த பல்கலைக்கழகம்.
- ★ ஏப்ரல் 1987 - ஆகஸ்ட் - 1988 - பீடாதிபதி பொறியியல் தொழில்நுட்ப பீடம் திறந்த பல்கலைக்கழகம்.
- ★ செப்டெம்பர் 1988 - மார்ச் 1994 - துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.
- ★ ஏப்ரல் 1990 முதல் - ஜனசவிய நம்பிக்கை நிதியச் சபை உறுப்பினர்.
- ★ 1990 முதல் - தொழில்நுட்பக் கல்வி ஆணைக்குழு உறுப்பினர்.
- ★ 1994 மார்ச் முடிய - மீளவும் திறந்த பல்கலைக் கழகம்.

### கௌரவிப்பு

- ★ 03 - 04 - 94 தேசப்பற்றுடன் செயற்பட்டு கல்வித்துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய அரும் பணியைப் பாராட்டி தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விருதுவழங்கிக் கௌரவிப்பு.

### கௌரவப் பதவிகள்

- ★ ஒக்டோபர் 1989 - 1990 சிறிலங்கா பொறியியல் மன்றத் தலைவர்.
- ★ பட்டயப் பொறியியலாளர், சிறிலங்கா பொறியியல் மன்றம்.
- ★ லண்டன் பொறியியலாளர், மன்ற அங்கத்தினர்
- ★ சிறிலங்கா விஞ்ஞான அக்கடமி அங்கத்தினர்.

## பேராசிரியர் மறைவினால் குடாநாட்டில் சோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் துரைராசா மரணமடைந்த செய்தி வெளியானதைத் தொடர்ந்து குடாநாட்டில் சோக உணர்வு பரவியது.

நேற்று நண்பகலளவில் மேற்படி தகவல் குடாநாட்டில் பரவத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சோக உணர்வுகளின் வெளிப்பாடுகளை அவதானிக்க முடிந்தது.

யாழ். பல்கலைக்கழக நூலக முன்றலிலும் ஏனைய பகுதிகளிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

இதைவிட யாழ். நகரத்திலும் ஏனைய பிரதான வீதிகளிலும் கறுப்புக் கொடிகள் கட்டும் முயற்சியில் மாணவர்கள் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (க)

## ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க ஐ. நா. படைகளை அழைக்க முயற்சி?

(கொழும்பு)

வருட இறுதியில் நடைபெற இருக்கும் தேர்தல்களை கண்காணிக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் படைகள் இலங்கைக்கு அழைத்துவருவது குறித்து அரசாங்கத்தரப்பில் ஆலோசிக்கப்பட்டுவருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

தேர்தல்களை நாடு முழுவதிலும் நடாத்தும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. தேர்தல் காலங்களில் நாட்டில் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதும், தேர்தல்களை மேற்பார்வை செய்வதுமே ஐக்கிய நாடுகள் சபை படையணிகளின் முக்கிய பணியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் படையணியில் யப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் துருப்புக்களுடன் ஐரோப்பிய நாடுகளின் துருப்புக்களையும் அழைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது

## குருநகரில் எறிகணை வீச்சிற்கு தூங்கிக் கொண்டிருந்த நால்வர் பலி

### அதிகாலையில் கோரச் சம்பவம்

(நமது நிருபர்)

குருநகர் மக்கள் குடியிருப்பு மீது மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலுக்கு இளம் குடும்பப் பெண் ஒருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு குழந்தைகளும் ஒரு வயோதிபரும் பலியாகினர். சிறுவர்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 1 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது. குருநகர் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு பலியாகினர்.

மேற்படி வீட்டில் தந்தை மகன், மகள் ஆகியோரது மூன்றுகுடும்பங்களைச்சேர்ந்த 12 பேர் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டு முற்றத்தில் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு 9 பேர் இலக்கானார்கள் அதில்நால்வர்பலியாகினர்

இதேவேளை மற்ற மூவரும் காயம் எதுவும் இன்றி உயிர் தப்பியுள்ளனர்.

இவ் எறிகணைத் தாக்குதலுக்கு இரு குழந்தைகளின் தாயாரான மோகனசுந்தரம் (சுரேஸ்) றோகினி கனிஸ்ரா (அகலியா- வயது 25) என்பவரும், யோசெப் சில்வெஸ்டர் (சிலுவை யோன் 79) சிலுவைசேகர் என்பவரது பிள்ளைகளான நிரோஜா (வயது4), உஷாந்தினி சிந்து (வயது 7) ஆகியோருமே பலியானவர்களாவர்.

இவர்களில் யோசெப் சில்வெஸ்டர் (சிலுவை வயது79) என்பவர் ஆஸ்பத்திரியில் காலமானார். (சி)

## குடும்பத்திற்கு 3லீ. மண்ணெய்

[யாழ்ப்பாணம்]

இன்று அல்லது நாளை பருத்தித்துறையை வந்தடையவுள்ள 'மாகோ' கப்பலில் எடுத்துவரப்படுகின்ற மண்ணெண்ணெயில் குடும்பத்திற்கு தலா மூன்று லீற்றர் வீதம் வழங்கப்படவுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

மிகுதி மண்ணெண்ணெய் விவசாயத்திற்கும் மற்றும் இதர தேவைகளுக்கும் வழங்கப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## எறிகணை தாக்குதலில் காயமடைந்தோர் விபரம்

(நமது நிருபர்)

குருநகர் பகுதியில்மூவரைப் பலிகொண்ட எறிகணைத் தாக்குதலின் போது படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களின் விபரம் வருமாறு:

தேக்கினம்மா (பாக்கியம்- வயது 65) மகள் லிட்வின் (விஜி வயது 16), மகன் சிலுவை தேவராஜா (சேகர் வயது 29) இவரது குழந்தைகள் இருவர் இச்சம்பவத்தின் போது பலியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது இச்சம்பவத்தின் போது பலியானவரான றோகினி கனிஸ்டா (அகலியா), என்பவரின் குழந்தைகளான நரேஸ் (வயது 4), தினேஷ் (வயது 2) ஆகியோர்

(சி) (21,

## தீக்குச்சியின் வெளிச்சத்தில் காயமடைந்தோரை தேடினேன்

### வீட்டிலிருந்த பெண்மணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''காதைப்பிளக்கும் வெடிச் சத்தம் கேட்டு துடித்துப் பதைத்து எழுந்தேன். எங்கும் புகைமண்டிக் கிடந்தது இந்தப்புகை மண்டலத்தின் மத்தியில் தீக்குச்சி வெளிசத்தில் காயமடைந்நவர்களை தேடினேன்'' இவ்வாறு நேற்று அதிகாலை குருநகரில் நடைபெற்ற எறிகணைத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட பெண்பிள்ளையின் தாயார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும் போது கண்களை எரிக்கும் புகைமண்டலத்திற்குள் இருந்து காயமடைந்தவர்களின் அலறல் ஒலிகள் பலமாகவே கேட்டது. ஆனால் அவர்கள் எவ்விடத்தில் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு இருளும் புகையும் கலந்து தடையாக இருந்தது. நான் தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சியைத் தட்டினேன். நான் தட்டும்ஒவ்வொருதீக்குச்சியையும் புகைமண்டலம் அணைத்துக்கொண்டிருந்ததுஇவ்வாறு தீக்குச்சி வெளிச்சத்தில் பார்த்தபோது காயமடைந்தவர்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்


**சாரதா**

கலை இலக்கிய சஞ்சிகை. அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து உடன் கண்ணாடிவழங்கப்படும். இல288 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8513)

**தேவை**

ஆங்கில மருந்து விற்பனை நிலையமொன்றுக்கு Sales girl தேவை தொடர்பு: Nedi Ouccan Pulaly Road, Urumpirai (8517)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோயிலர்இறைச்சிக்கோழி உடன் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் ஆஷா கோழிப் பண்ணை, 1ம் கட்டை, பருத்தித்துறை. (8523)

**இறைச்சிக் கோழி**

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு காலை 7.00 மணி முதல் 11-00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும் (வெலிங்டன் சந்தி வடக்கு வீதி). 382 மணிக் கூட்டு வீதி யாழ்ப்பாணம்- (8524)

**EASY ENGLISH**

ஆங்கிலம் இலகுவில் கற்க, கற்பிக்க T. M அன்ரனிப்பிள்ளை LL. B. எழுதிய ''ஈசி இங்கிலீஸ்'' (EASY ENGLISH PART I - V) தொகுப்பு பெரும் துணைபுரியும். ஆசிரியரின் புதிய வெளியீடாக 'ஈசி லற்றீன் எக்ஸ்பிரசன்ஸ்' (Easy Latin Expressions) ஆங்கிலம், தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளிவந்துள்ளது. (சி-9637)

**சலனம்**

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

**துளிர்**

தமிழ் நாடு, புதுவை அறிவி



வரையறுக்கப்பட்ட கூட்டுறவு
வைத்தியசாலைச் சங்கம், மூளாய்
பதிவு இல. 83 / 4 - 04 - 1936

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1994 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆம் (03-07-94) திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. கூட்ட அறிவித்தல் வாசித்தல்
3. தலைவர் உரை
4. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
5. எண்பார்வை அறிக்கை (1991-92ம் 1992-93ம்)
6. மொத்தக்கடன் எல்லை ரூபா. 500,000/- அங்கீகாரம்
7. வட இலங்கை மருத்துவக் கல்லூரியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்
8. பிரேரணைகள்
9. புதிய அங்கத்தவர்கள் அங்கீகாரம்
10. பணிப்பாளர் சபை வெற்றிடங்கள் தெரிவு: சித்தங்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கு, மேற்கு, அராலி (2), சங்கானை மேற்கு, பண்ணாகம்(2), தொல்புரம், மூளாய், பொன்னாலை (1), சுழிபுரம், நெல்லியான் (2), காரைநகர் (2), பண்டத்தரிப்பு, சங்கானை கிழக்கு, மாதகல் (1).
11. நன்றியுரை
12. இறைவணக்கம்

குறிப்பு:
1. 26-06-94 இற்கு முன்பு கிடைக்கும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.
2. எண்பார்வை அறிக்கைகளை (91/92-92/93) சங்க அலுவலகத்தில் அங்கத்தவர் பார்வையிடலாம்.
3. அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமுகமளிக்கையில் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு ஏதாவதொரு ஆவணத்தை தம்முடன் எடுத்து வரும்படி கோரப்படுகின்றனர்.

வ. அ. வரதராசா
தலைவர்

நா. வேலுப்பிள்ளை
செயலாளர்

(சி-9639) 12-06-94



DIPLOMA IN NURSING

தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

புதிய நெறி ஆரம்பமாகி விட்டது

★ இலகு பயிற்சி நெறி
★ சிறந்த விரிவுரையாளர் குழு
★ விசேட செய்முறை வகுப்புக்கள்
★ இலவச ஆங்கில,பாமலி வகுப்புக்கள்

விபரங்களுக்கு:-

NORTH CEYLON


## நினைவு கூருகின்றோம்... 12-06-1994

1985-ம் ஆண்டு இதே தினத்தில் இங்கினியகலையில்-அம்பாறைப்பகுதி காவல்துறையினரால் படுகொலை செய்யப்பட்ட 05 தமிழர்கள்.

1986-ம் ஆண்டு மன்னார்-மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.அருச்சுனா-ஆர்.பி.ஜி** (சதாசிவம் தமிழரசுவரன்-46 அத்தியடி, புதுவீதி-யாழ்)

திருமலை-மூதூர், மகிந்தபுரம் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **முரளி** (கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை-ஈச்சிலம்பத்தை, மூதூர்-திருமலை)

இதே பகுதியில் சிறிலங்கா ஊர்காவல்படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 19 தமிழர்கள்.

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **தருமன்** (தாமோதரம் தங்கராசா - ஈச்சிலம்பத்தை, மூதூர்-திருமலை)

திருமலை - தம்பலகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1988-ம் ஆண்டு வவுனிக்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய,

**லெப்.அத்தார்-யசோதரன்** (தர்மலிங்கம் யசோதரன் - கற்குளம்-நெடுங்கேணி)

1989-ம் ஆண்டு வவுனியாவில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச்செல்லப்பட்ட சின்னக்குளம் பகுதியில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட

முல்லைத்தீவு பிராந்திய பொதுக்குழு உறுப்பினர்,

★ **மாமா** (வேலாயுதம் நாகரத்தினம்-கள்ளப்பாடு-முல்லைத்தீவு)

★ **சாம்** (இராமச்சந்திரன்-காத்தான்குளம்-மன்னார்)

★ **குணபால்** (பெரியகுளம், கனகராயன்குளம்-வவுனியா)

★ **ஐயா-அர்ச்சுனன்** (விக்கினேஸ்வரன்-புளியங்குளம், ஓமந்தை-வவுனியா)

★ **செல்வம்** (நா.சிவபாலன்-இரணை இலுப்பைக்குளம்-வவுனியா)

★ **வன்னி** (— நாகலிங்கம்-கல்மடு, இரணை இலுப்பைக்குளம்-வவுனியா)

இதே தினத்தில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட விழிசிட்டியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990-ம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**மேஜர் நேசன்** (ராஜு பஞ்சாட்சரம்-அக்கரைப்பற்று 07-அம்பாறை)

**வின்சன்** (கல்முனை-அம்பாறை)

**ஜெகதீசன்** (சா.லோகநாதன்-அரசடிதீவு-மட்டு)

**மகிழன்-முகிலன்** (சண்முகநாதன் யோகநாதன்-கோவில்போரதீவு-மட்டு)

**திலீபன்** (- - புல்லுமலை-மட்டு)

**மகேந்திரன்** (கந்தசாமி தயாகரன்-வெல்லாவெளி-மட்டு)


**ஜெகநேசன்** (கிருஷ்ணபிள்ளை சேதுராசா-அலியார்வெட்டை-மட்டு)

**றொமி** (- - - கல்லடி-மட்டு)

மட்டு-கும்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் கோமஸ்வரன்** (குமாரசாமி சிவமூர்த்தி-

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 - 02 - 1925

மறைவு: 10 - 06 - 1986

### தம்பு கதிரவேலு

(இளைப்பாறிய முன்னைநாள் அதிபர் யா/கர்பர்மலை அ. த. க. பாடசாலை)

ஆண்டுத் திதி: 12-06-1994


தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மை வழி நடத்தி இன்று சிவத்தோடு கலந்து விட்ட உங்கள் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டகலா.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

''ஆனந்த பவனம்''
நிருவத்தம்பை, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள்,
மருமகள், பேர்த்தி.
(8451)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
07-0?-1975

ஆண்டவன் அடியில்
14-05-1994

### செல்வன் சி. ஞானபாஸ்கரமூர்த்தி (ஆதித்தன்)

சீருடைய எங்கள் சிங்காரச் செல்வமே - கண்
நீர்துடைக்க வழியின்றி நிலைகுலைந்து
நிற்கின்றோம்.
கார் அகற்றும் ஆதித்தா காலன் கைப்பட்டாயோ
யார் துடைப்பார் எம்துயரை யௌவனமே
மீளாயோ
உலகெல்லாம் ஒளிபரப்ப உதித்த இளஞ்சூரியனே
உலவும் இளமையிலே நீ உதிர்ந்து விட்ட மர்மமென்ன
தனிமையிடத்தினிலே தளிரே நீ சாய்ந்ததென்ன
தனிமை எமை வாட்ட தவிக்கின்றோம்உன் பிரிவால்
உரிமையுள்ள உந்தன் உடன்பிறந்தோர் இங்கிருக்க
அருமை இளவலே நீ நடுவழியில் இறந்ததென்ன?

## EASY ENGLISH

ஆங்கிலம் இலகுவில் கற்க, கற்பிக்க T . M அன்ரனிப்பிள்ளை LL. B. எழுதிய ''ஈசி இங்கிலீஸ்'' (EASY ENGLISH PART I - V) தொகுப்பு பெரும் துணைபுரியும். ஆசிரியரின் புதிய வெளியீடாக 'ஈசி லற்றீன் எக்ஸ்பிரசன்ஸ்' (Easy Latin Expressions) ஆங்கிலம், தமிழ்மொழிபெயர்ப்புடன் வெளிவந்துள்ளது. (சி-9637)

## சலனம்

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

## துளிர்

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது (8474)

## துளிர்

ஏப்பிரல், மார்ச் இதழ்கள் விற்பனையாகிறது. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். (8473)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA CD - 125, C - 90, மற்றும் CD - 50 (சாளி) மோட்டார் சைக்கிள்களும், FORD ரைக்ரர் பெட்டியுடன், Water -Pump -ம் உள்ளது. A. துரைசிங்கப்பா, ''அருட்பதி'' எழுதுமட்டுவாள். (8529)

## ராகு கேது மாற்றமும் குரு சண்டாள தீய யோகமும்

வியாழன் 10 பாகையில் ராகுவுடன் ஜுலை முதல் தீய சேர்க்கையும் சனி பார்வையும் அரசுக்குள் பிளவுகளையும், குத்துவெட்டுகளை வன்முறைகளையும் உண்டாக்கும். இங்கும் யுத்தபீதியே சத்தியாவின் ராகு கேது. மாற்றத்திற்கு கனகா ரேடர்ஸ், திருநெல்வேலி. (8532)

## புதிய வகுப்புக்கள்

YOGI HOME SCIENCE ACADEMY 15 - 6 - 94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant - Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. 71 B, நாயன்மார் வீதி, சச்சேரி நல்லூர் றோட் நல்லூர் (8530)

---

(சி-9639) 12-06-94

# DIPLOMA IN NURSING

## தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

### புதிய நெறி ஆரம்பமாகி விட்டது

- ★ இலகு பயிற்சி நெறி
- ★ சிறந்த விரிவுரையாளர் குழு
- ★ விசேட செய்முறை வகுப்புக்கள்
- ★ இலவச ஆங்கில,பாமலி வகுப்புக்கள்

விபரங்களுக்கு:-

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

*14, ST. PETER'S LANE*
*JAFFNA*

(சி-9630)

---

## தாய்மார்களுக்கு நற்செய்தி பளிச்சிடும் வெண்மையை தந்திடும் ஒரே நீலம்

# றோயல் நீலம்

- பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது
  **றோயல் நீலம்**
- வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது
  **றோயல் நீலம்**
- ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல் பட்டென பளிச்சிடுவது
  **றோயல் நீலம் ஒன்றுதான்**

தமிழீழத்தில் உத்தரவாதம் பெற்றது றோயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

**சில்லறை விலை ரூ. 6 . 50 மட்டுமே**

சந்தைப்படுத்துவோர்:

# றோயல் இன்டஸ்றீஸ்,

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-9597)

---

டுக் கொல்லப்பட்ட விழிசிட்டியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990-ம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**மேஜர் நேசன்** (ராஜு பஞ்சாட்சரம்-அக்கரைப்பற்று 07-அம்பாறை)
**வின்சன்** (கல்முனை-அம்பாறை)
**ஜெகதீசன்** (சா.லோகநாதன்-அரசடிதீவு-மட்டு)
**மகிழன்-முகிலன்** (சண்முகநாதன் யோகநாதன்-கோவில்போரதீவு-மட்டு)
**திலீபன்** (- - புல்லுமலை-மட்டு)
**மகேந்திரன்** (கந்தசாமி தயாகரன்-வெல்லாவெளி-மட்டு)
**ஜெகநேசன்** (கிருஷ்ணபிள்ளை சேதுராசா-அலியார்வெட்டை-மட்டு)
**றொமி** (- - - கல்லடி-மட்டு)

மட்டு-கும்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் கோடீஸ்வரன்** (குமாரசாமி சிவமூர்த்தி-கிரான்-மட்டு)
**கப்டன் வாமன்** (வேல்முருகு யோகராசா-சந்திவெளி-மட்டு)
**லெப்.ஜெமில்** (சரீம் முஸ்தபா-ஓட்டமாவடி-மட்டு)
**குயிலி** (சகாதேவன் தங்கவடிவேல்-இலுப்பையடிச்சேனை-மட்டு)
**ராஜா** (சிவனேசன்-மயிலம்பாவெளி-மட்டு)
**கடாபி** (நல்லையா சுதேசன்-வந்தாறுமூலை-மட்டு)
**நேரு** (நவரத்தினம் சுவேந்திரன்-காயன்குடா, செங்கலடி-மட்டு)
**பிரபா** (வேலாயுதம் கண்ணதாசன்-கிரான்-மட்டு)
**ஜனகன்** (தம்பிஐயா ஜெகநாதன்-கிரான்-மட்டு)
**பீற்றர்** (பூபாலப்பிள்ளை சந்திரகாந்-சொறிவில்-மன்னம்பிட்டி)
**தௌபீக்** (இஸ்மாயில்-ஓட்டமாவடி-மட்டு)
**பழனி** (ராசா அற்புதராசா-முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)
**துரை** (பெரியதம்பி வடிவேல்-காயன்குடா-மட்டு)
**ருசியன்** (தம்பிராசா புலேந்திரன்-முதலைக்குடா-மட்டு)

அம்பாறை-கல்முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய

**ஜெயராஜ்** (- - கல்முனை-அம்பாறை)

மட்டு-கல்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**சிவா** (சதாசிவம் நகுலன்-வாழைச்சேனை-மட்டு)
**சசிக்குமார்** (- - வாழைச்சேனை-மட்டு)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெசி** (இம்மானுவேல் குறோசியஸ்-நெடுங்கேணி, ஒட்டிசுட்டான்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவன், இளம்பெண் உட்பட 06 தமிழர்கள். சிறிலங்கா ராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தைகள், மாணவர்கள் பெண்கள் உட்பட கல்முனை வாசிகளான 12 தமிழர்கள். கல்முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட 7 வயது சிறுமி உட்பட 04 தமிழர்கள்.

மட்டுநகர்-கார்மேல் திருக்குடும்ப கன்னியர்மடத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கன்னியாஸ்திரிகள், மாணவிகள் உட்பட 07 தமிழர்கள். வவுனியாவுக்கு வேலைக்குச் சென்ற போது காணாமற்போன

---



14-05-1994

## செல்வன் சி. ஞானபாஸ்கரமூர்த்தி
## (ஆதித்தன்)

சீருடைய எங்கள் சிங்காரச் செல்வமே - கண்
நீர்துடைக்க வழியின்றி நிலைகுலைந்து
நிற்கின்றோம்.
கார் அகற்றும் ஆதித்தா காலன் கைப்பட்டாயோ
யார் துடைப்பார் எம்துயரை யௌவனமே
மீளாயோ
உலகெல்லாம் ஒளிபரப்ப உதித்த இளஞ்சூரியனே
உலவும் இளமையிலே நீ உதிர்ந்து விட்ட மர்மமென்ன
தனிமையிடத்தினிலே தளிரே நீ சாய்ந்ததென்ன
தனிமை எமை வாட்ட தவிக்கின்றோம்உன் பிரிவால்
உரிமையுள்ள உந்தன் உடன்பிறந்தோர் இங்கிருக்க
அருமை இளவலே நீ நடுவழியில் இறந்ததென்ன?
இந்த வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை ஐயா
எந்த நிலையிலும் நாம் உன் பிரிவை மறப்போமா
தூங்கா மணிவிளக்காய் வானத்து ஒளி நிலவாய்
மங்கா ஒளிபடைத்த நித்திலமாய் நின்றென்றும்
நீங்கா எம் நினைவில் நிறைவாய் நீ நின்றாலும்
பாங்காய் பரமன் பதம் படிந்து உய்ந்திடுவாய்
ஓம் சாந்தி

12-06-94 இன்று வீட்டுக்கிருத்தியமும், 13-6-94 அன்று மதிய போசனமும் நடைபெறும் என்பதை உறவினர்கள், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

பழம்றோட்,
இருபாலை. (8535)

- குடும்பத்தினர்

---

மட்டு-புன்னைச்சோலை குமாரபுரத்தைத் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

வெலிகந்தை - புகையிரதக் கடவையில் வைத்து காணாமற்போன மட்டுநகர் - புகையிரதவிடுதி வாசியான தமிழிளைஞன்.

1991-ம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட கோப்பாவெளியைச் சேர்ந்த 02 தமிழர்கள், கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, முதலைக்குடா பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் குத்தியும், வெட்டியும், சுட்டும் அடித்தும் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 225க்கு மேற்பட்ட தமிழர்கள். மற்றும் சம்பவத்தின் போது காணாமல்போன குழந்தைகள் சிறுவர்கள், இளம்பெண்கள், இளைஞர்கள் உட்பட 56 தமிழர்கள், பெரியபுல்லுமலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த இளம்பெண்,

1992-ம் ஆண்டு வலிகாமம் வடக்கு பகுதியில் 4 முனைகளில் சிறிலங்கா இராணுவம் முன்னேறமுயன்ற போது சேந்தாங்குளம் பகுதியில் ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.கருணாகரன்-நேசன்** (த.மகேசன்-பொற்பதிவீதி, கொக்குவில்-யாழ்)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.


★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-9648)

# ஜொலிஸ்ரார் கிண்ணத்திற்கான இறுதிக் கிரிக்கெட் போட்டி

## வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கையுடன் போட்டியை எதிர் கொள்கிறோம் -ஜொனியன்ஸ்



ஜொலிஸ்ரார் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்றாகும். யாழ்ப்பாணத்தில் இருபிரபல்யமான, ஜொனியன்ஸ் அணியும், சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ள இப்போட்டிபற்றி அவ் இரு அணியினது தலைவர்களை சந்தித்து உரையாடினோம். அவர்கள் தமது நிலை, எதிரணியின் நிலை, தமது வெற்றிவாய்ப்பு என்பனபற்றி எம்முடன் மனம திறந்து பேசினர்.

★ ★

★ நீங்கள் கலந்துகொண்ட ஜொலிஸ்ரார் சுற்றுப் போட்டிகள் பற்றிக் கூறுங்கள?


88முதல் நாங்கள் ஜொலிஸ்ரார் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்கிறோம். கலந்து கொண்ட ஒவ்வொரு முறையும் இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றோம் 88-90-92ஆம் ஆண்டுகளில் நாங்கள் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டோம்.

★ இவ்வருட ஜொலிஸ்ரார் சுற்றுப் போட்டியில் நீங்கள் பங்கு கொண்ட ஆட்டங்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

நாங்கள் கொக்குவில் ம.ச.ச. அணி, மானிப்பாய் பரிஷ் அணி, ஓல்ட் கோல்ட் அணியினரை வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளோம் நாம் பெற்ற ஓட்டங்களை முறையே 5,4,3 என்றரீதியில் குறைந்த இலக்குகளை மட்டும் இழந்துபெற்றுக்கொண்டோம் எமது முன்வரிசை வீரர்கள் சிறப்பாக விளையாடிக் கொண்டிருப்பதை இது காட்டுகின்றது. அதோடு இறுதிப்போட்டி பற்றிய நம்பிக்கையையும் தருகின்றது.

★ நீங்கள் சென்றலைட்ஸ் அணியை இறுதியாட்டமொன்றில் சந்திப்பது இது எத்தனையாவது முறை?

88ஆம் ஆண்டில் அழைக்கப்பட்ட 4 அணிகளுக்கிடையிலான ஒரு சுற்றுப் போட்டியில் இறுதிப்போட்டியில் இவர்க



ஜொனியன்ஸ் அணித்தலைவர் பரிசித்து

ளைச் சந்தித்தோம். ஆனால் சகல கழகங்களும் கலந்து கொள்ளும் சுற்றுப்போட்டியென்ற வகையில் ஓர் இறுதியாட்டத்தில் நமதிரு அணிகளும் கலந்து கொள்வது இதுவே முதலாவது முறையாகும்.

★ சென்றலைட்ஸ் அணிபற்றி நீங்கள் எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்?

அவர்கள் எங்களுக்குச் சமதையான ஒரு சிறந்த அணியினர். இரு அணியினரும் ஒரு சமநிலையை பேணக் கூடிய அணியினர். ஜொலிஸ்ரார் சுற்றுப் போட்டிகளில் நமதிரு அணிகளும் சந்தித்துள்ளோம் ஆனால் எமது அணி இதுவரையில் அவர்களிடம் தோல்விகாணவில்லையென்பதையும் குறிப்பிட வேண்டும். அவை 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டங்களாகும்.

★ காண்டீபன் கடந்த காலங்களில் உங்கள் அணிக்காக மிகச் சிறப்பாக விளையாடிய ஒரு வீரர். ஆனால் இம்முறை அவருடைய பந்து வீச்சு சோபிக்கவில்லையே ஏன்?

நிறைந்த பயிற்சியைப்பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்காமல் போனமையே இதற்குக் காரணமாகும். ஆனால் கடந்தகாலங்களில் திறமையாக பந்து வீசியது போல இறுதியாட்டத்தில் பந்து வீசுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அவரின் பந்து வீச்சு பிரகாசமாக இருப்பின் எமது வெற்றிவாய்ப்பும் அதிகரித்துக் காணப்படும்.

★ சென்றலைட்ஸ்அணியில் அனுபவம்நிறைந்தமூத்த உறுப்பினர்கள் சிலர் அணியின் பெரும்பலமாக உள்ளனர். அவர்களைஎன்ன வகையில் நீங்கள் எதிர்கொள்ளப்போகிறீர்கள்

92-ல் மிகத்திறமைவாய்ந்த சாப்ரா அணியை நாம் இலகுவாகத் தோற்கடித்தோம் இதற்குக்காரணமாக அமைந்தவர் எமதணியின் மூத்த உறுப்பினர் சூரி அண்ணா தான் அன்றும் அவர் வழிநடத்தலில் அவ் வெற்றி சாத்தியமாயிற்று

இம் முறையும் களத்தினுள்ளும் வெளியிலும் அவரின் வழிநடத்தலில் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். சூரி அண்ணன் எம்முடன் இருப்பதால் அனுபவம் வாய்ந்த அந்தச் சிறந்த வீரர்களை

(4 ஆம்பக்கம் பார்க்க)

## பலமான ஜொனியன்சுடன் மோதுவதை சவாலாக ஏற்கின்றோம் - சென்றலைட்ஸ்



சென்றலைட்ஸ் அணித் தலைவர் சுரேந்திர ஜித்

★ ஜொலிஸ்ரார் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் சென்றலைட்ஸ் பங்கு பற்றியமை பற்றி...

ஜொலிஸ்ரார்கிரிக்கெட்சுற்றுப் போட்டியில் நாங்கள் நான்கு முறை இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றோம் இதில் 83-89-93 ஆண்டுகளில் வெற்றிக் கிண்ணத்தைப்பெற்றுக் கொண்டோம். ஒரு முறை Runners Up என்ற நிலையைப் பெற்றோம்.

★ இதுவரையில் ஜொனியன்ஸ் அணியுடன் கலந்து கொண்ட இறுதிப் போட்டிகள் பற்றி...

பல கழகங்கள் கலந்து கொள்ளும் எந்தவொரு இறுதிப்போட்டியிலும் நாங்களும் ஜொனியன்சும் சந்தித்ததே கிடையாது. யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக 'ஜொலிஸ்ரார்' 94 சுற்றுப் போட்டியில் தான் இறுதிப் போட்டியில் சந்திக்கப்போகிறோம்.

★ ஜொலிஸ்ராரில் சுற்றுப்போட்டியின் ஆரம்ப கட்டப் போட்டிகள் உங்களுக்கு இலகுவான வெற்றிகளைப் பெற்றுத்தந்ததா?

வெற்றி வாகை சூடினோம் என்பது உண்மை தான் இதில் குறிப்பிடப்படவேண்டிய விடயம் ஒன்றுண்டு எமது முன்வரிசை, மத்திய வரிசைஆட்ட வீரர்கள் தம் திறமையைக் காட்டத்தவறியபோதெல்லாம் இறுதி வரிசை வீரர்களின் சமயோசித விளையாட்டால் நாம் வெற்றி பெற்றோம் என்பதை மறுக்க இயலாது.

★ உங்கள் அணி பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?

உன்னையும் உனது திறமையையும் சென்றலைட்சுக்காக அர்ப்பணி என்ற கோட்பாட்டில் உருவாகியவர்கள் சென்றலைட்ஸ் அணியினர். எமது வீரர்கள் சகல வல்லமையும் மேலாகக் கட்டுப்பாடும் எமது அணி என்ற உணர்வும் கொண்டவர்கள். இதன் தலைவனாக இருப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

★ உங்கள் அணியில் அதிசிறப்பாக தம் பங்கையாற்றிக் கொண்டிருக்கும் ஒருசில வீரர்களைக் குறிப்பாகக் கூற இயலுமா?

எமது அணியினர் எல்லோருமே முன்னணி வீரர்கள். அணிக்குச் சாதகமான நிலையை எவரும் எப்போதும் உருவாக்க வல்லவர்கள். நிகழ்ந்து முடிந்த அரை இறுதியாட்டத்தில் இறுதிச் சோடி வெற்றிப் பாதையை அமைத்துத் தந்ததை எவரும் மறுக்கமாட்டார்கள்.

★ ஜொனியன்ஸ் அணி ஒரு பலம் மிக்க அணி என்ற அபிப்பிராயம் பொதுவாக நிலவுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

யாழ் நகரில் காணப்படும் சிறந்த அணிகளில் பலமானதொரு அணியினர் ஜொனியன்ஸ் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அவர்களுடன் களத்தில் குதித்துப் போட்டியிடுவதை சவாலாக ஏற்றுக்கொள்கின்றோம். ஆட்டத்தின் முடிவை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எமதணியினருக்குஉண்டு.

★ உங்கள் அணியில் அனுபவமும் திறமையும் ஒருங்கே கொண்ட மூத்த உறுப்பினர்கள் சிலர் இருக்

(4ஆம் பக்கம் பார்க்க)

**யாழ்ப்பாணக் கிரிக்கெட் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் - சென்றலைட்ஸ் ஆட்டம் என்பது எக்கட்டத்திலும் விசேட ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுவதொன்றாகும். ஆனால் இதில் சுவையானதொரு செய்தி என்னவென்றால் கழகங்கள் நடாத்தும் எந்தவொரு சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியிலும் இவர்கள் சந்திக்கவில்லை என்பதுதான்.**

# கரபந்தாட்டத்தின் (VOLLY BALL) வளர்ச்சிப் படி

லிஸ்ரார் சுற்றுப் போட்டிகள் பற்றிக் கூறுங்களா?

88முதல் நாங்கள் ஜொலிஸ்ரார் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்கிறோம். கலந்து கொண்ட ஒவ்வொரு முறையும் இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றோம் 88-90-92ஆம் ஆண்டுகளில் நாங்கள் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டோம்.

★ இவ்வருட ஜொலிஸ்ரார் சுற்றுப் போட்டியில் நீங்கள் பங்கு கொண்ட ஆட்டங்கள்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

நாங்கள் கொக்குவில் ம.ச.ச. அணி, மானிப்பாய்பரிஷ்அணி, ஓல்ட் கோல்ட் அணியினரை



ஜொனியன்ஸ் அணித்தலைவர் பரிசித்து

ளைச் சந்தித்தோம். ஆனால் சகல கழகங்களும் கலந்து கொள்ளும் சுற்றுப்போட்டியென்ற வகையில் ஓர் இறுதியாட்டத்தில் நமதிரு அணிகளும் கலந்து கொள்வது இதுவே முதலாவது முறையாகும்.

ளா? அவர்களைஎன்ன வகையில் நீங்கள்எதிர்கொள்ளப்போகிறீர்கள்

92-ல் மிகத்திறமைவாய்ந்த சாப்ரா அணியை நாம் இலகுவாகத் தோற்கடித்தோம் இதற்குக்காரணமாக அமைந்தவர் எமதணியின் மூத்த உறுப்பினர் சூரி அண்ணா தான் அன்றும் அவர் வழிநடத்தலில் அவ் வெற்றி சாத்தியமாயிற்று

இம் முறையும் களத்தினுள்ளும் வெளியிலும் அவரின் வழிநடத்தலில் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். சூரி அண்ணன் எம்முடன் இருப்பதால் அனுபவம் வாய்ந்த அந்தச் சிறந்த வீரர்களை

(4 ஆம்பக்கம் பார்க்க)

கிண்ணத்தைப்பெற்றுக் கொண்டோம். ஒரு முறை Runners Up என்ற நிலையைப் பெற்றோம்.

★ இதுவரையில் ஜொனியன்ஸ் அணியுடன் கலந்து கொண்ட இறுதிப் போட்டிகள் பற்றி...

பல கழகங்கள் கலந்து கொள்ளும் எந்தவொரு இறுதிப்போட்டியிலும் நாங்களும் ஜொனியன்சும் சந்தித்ததே கிடையாது. யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக 'ஜொலிஸ்ரார்' 94 சுற்றுப் போட்டியில் தான் இறுதிப் போட்டியில் சந்திக்கப்போகிறோம்.

★ ஜொலிஸ்ராரில் சுற்றுப்போட்டியின் ஆரம்ப கட்டப் போட்டிகள்

**யாழ்ப்பாணக் கிரிக்கெட் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் - சென்றலைட்ஸ் ஆட்டம் என்பது எக்கட்டத்திலும் விசேட ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுவதொன்றாகும். ஆனால் இதில் சுவையானதொரு செய்தி என்னவென்றால் கழகங்கள் நடாத்தும் எந்தவொரு சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியிலும் இவர்கள் சந்திக்கவில்லை என்பதுதான்.**

காட்டத்தவறியபோதெல்லாம் இறுதி வரிசை வீரர்களின் சமயோசித விளையாட்டால் நாம் வெற்றி பெற்றோம் என்பதை மறுக்க இயலாது.

★ உங்கள் அணி பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?

டத்தின் முடிவை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எமதணியினருக்குஉண்டு.

★ உங்கள் அணியில் அனுபவமும் திறமையும் ஒருங்கே கொண்ட மூத்த உறுப்பினர்கள் சிலர் இருக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கரபந்தாட்டத்தின் (VOLLY BALL) வளர்ச்சிப் படி

1895ம் ஆண்டு முதன் முதல் அறிமுகம் செய்யப்பட்ட முழு உடலுக்குமே பயிற்சியைக் கொடுக்கக் கூடிய கரபந்தாட்டமானது, இன்று உலகில் உள்ள நூற்றுக்கணக்கான நாடுகளில் விளையாடப்படுகின்றது.

எமது நாட்டில் இவ்வாட்டத்திற்கான முக்கியத்துவம் குறைந்திருந்த போதிலும், எமது பிரதேசத்தில் இன்று நூற்றுக்கணக்கான ஏன்? ஆயிரக்கணக்கான பார்வையாளர்களைக் கூட மைதானத்தே கொண்டுள்ள விளையாட்டாக இக்கரபந்தாட்டம் புத்தெழுச்சி பெற்றிருக்கிறது 1960ற்கு முன்னர் பாடசாலை மட்டத்தில் பெரிதும் பேணப்பட்ட இவ்விளையாட்டானது மாவட்டமட்டம், தேசிய மட்டம் என்ற அளவிற்கு உயர்ந்திருந்தது நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இன்று பாடசாலை மட்டத்தில் 1991ஆம் ஆண்டு யாழ் மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட போட்டிகளை முன்னோடியாகக் கொண்டு கல்வித்திணைக்களமானது கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம் என்ற அளவிற்கு உயர்த்தியிருப்பது உண்மையில் இவ்விளையாட்டை வளர்ப்பதற்கு எடுக்கப்படும் முழு முயற்சிதான்.

1993 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட இரண்டு பிரிவுகளைக் கொண்ட இப்போட்டியில் பல அணிகள் கலந்து கொண்டன மாட்ட நிலையில் 17 வயதுப்பிரிவில்சென்ஜோண்ஸ் கல்லூரியும் 19 வயதுப்பிரிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரியும் வெற்றி பெற்று மட்டு அம்பாறை மாவட்டத்தளபதிகளாக இருந்து வீரச்சாவு அடைந்த லெப். கேணல் ஜோய் லெப்.கேணல் றீகன் ஆகியோரின் நினைவுக்கேடயங்களைத் தமதுதாக்கிக் கொண்டனர்.

1994 ஆம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்கிடையே மாவட்ட மட்டத்திலான இச் சுற்றுப்போட்டியானது சித்திரைமாத முற்பகுதியில் ஆரம்பமாகி 06-06-94இல் இறுதி நிலை அடைந்தது இச்சுற்றுப் போட்டித் தொடரில் யாழ் மாவட்டத்தில் பல்வேறுபட்ட பிரதேசங்களில் இருந்து 1993 ஆம் ஆண்டை விட அதிகமான பாடசாலைகள் கலந்து கொண்டன இதில் கலந்து கொண்ட அநேகமான பாடசாலை அணிகள் தமது பாடசாலைப் பெயர் பொறித்த அங்கிகளுடன் கலந்து கொண்டது கூட கரபந்தாட்ட அணிகளுக்கு மேலும் மெருகூட்டுவனவாக அமைந்தன.

1994-06-06 அன்று நீர்வேலிஅத்தியார்இந்துக்கல்லூரியில்நடைபெற்ற இறுதியாட்டத்தில் 17 வயதுப்பிரிவில் யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்து சென்ஜோண்ஸ் கல்லூரியும்19 வயதுப்பிரிவில் யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்து கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய அணியும் மோதின.

இவ்வாட்டங்களைக் காண்பதற்காக பல நூற்றுக்கணக்கான மக்களும், மாணவர்களும் திரண்டிருந்தனர் பிற்பகல் 2.45 ற்கு ஆரம்பமான 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முதலாவது செற்றில் 15ற்கு 10 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் இரண்டாவது செற்றில் 15 ற்கு 09 என்ற புள்ளிகளோடு இரண்டு தொடரான செற்றுகளையும் அதாவது 2ற்கு என்ற செற்கணக்கில் யாழ் மத்திய கல்லூரி வெற்றிபெற்று லெப்.கேணல் றீகன் அவர்களின் நினைவுக் கேடயத்தினைத்தட்டிக் கொண்டது.

பிற்பகல் 3 56 ற்கு ஆரம்பமான 19 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டமானது ஐந்து செற்றுக்களைக் கொண்டதாக அமைந்தது. இவ்வாட்டத்தில் கனகரட்ணம் மத்தியமகாவித்தியாலயத்தை எதிர்த்து ஆடிய யாழ் மத்திய கல்லூரியானது 15 ற்கு 11 என்ற புள்ளிகளில் முதலாவது செற்றையும், இரண்டாவது செற்றை 17ற்கு 15 என்ற புள்ளிகளில் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றிபெற்றது: மூன்றாவது செற் ஆனது மிகவும் விறுவிறுப்படைந்து 15 ற்கு 12 என்ற புள்ளிகளிலும் நான்காவது செற்றானது 15ற்கு 10 என்ற புள்ளிக்கணக்கிலும் இரண்டு தொடரான செற்றுகளையும் யாழ் மத்திய கல்லூரி தனதாக்கிக் கொண்டு 03ற்கு 01 என்ற செற்கணக்கில் வெற்றி ஈட்டியது இவ்வணியானது 1994 ஆம் ஆண்டிற்கான லெப்.கேணல்ஜோய் அவர்களின்நினைவுக் கேடயத்தைத்தனதாக்கிக் கொண்டது.


வெகு விறுவிறுப்பாகவும் இரசிகர்களுக்கு கண்ணுக்கு விருந்தாகவும் அமைந்த 19 வயதினருக்கு உட்பட்டவருக்கான போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றதினால் இப்போட்டி ஒரு மணித்தியலமும் 48 நிமிடங்களும் நீடித்தமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளும் தலா ஒரு செற்றைப் பெற்று 3 வது செற்றில் ஆடியபோது கனகரத்தினம் அணி 9 புள்ளிகளையும் மத்திய கல்லூரி அணி 8 புள்ளிகளையும் பெற்றிருந்த நிலையில் 14 தடவை பக்க மாற்றங்கள் இடம் பெற்றமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஒரு சந்தர்ப்பத்தில் மத்திய கல்லூரி அணி இக்கட்டான நிலையில் இருந்த போது அவ்வணியின் பயிற்றுநர் சராபுவனேஸ்வரன் கேட்டுப் பெறும் ஓய்வு பெற்று பயனுள்ள அறிவுரைகளை அணிக்கு வழங்கி ஆட்டத்தின் போக்கையே மாற்றியமை பாராட்டத்தக்கது.

இவ் வருடம் 17 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவு ஆட்டத்திலும் 19 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவு ஆட்டத்திலும் யாழ் மத்திய கல்லூரி அணிகளே வெற்றியீட்டியமை மெச்சத்தக்கதொன்றாகும். மேலும்இப் போட்டியில் 3ம் இடத்தை 17 வயதுப் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் பெற்றன.

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக தமிழ் ஈழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் வண பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரும் சிறப்பு அதிதிகளாக யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் விசேட தளபதி திரு. வ. செல்வராஜா, வலயம் 1 உதவிப் கல்விப்பணிப்பாளர் திரு. C புலேந்திரன் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இப்போட்டிகளை உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அருணகிரிராஜா சிறப்பாக நெறிப்படுத்தி அனைவரினதும் பாராட்டுதல்களைப் பெற்றார்.




17 வயதிற்கு உட்பட்ட மத்திய கல்லூரி அணி




19 வயதிற்கு உட்பட்ட மத்திய கல்லூரி அணி

## வெற்றி

எதிர்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

★ ஜொனியன்ஸ் சார்பாக இறுதியாட்டத்தில் பங்குகொள்ளப் போகும் குறிப்பிடத்தக்க இளம் வீரர்கள் யார்?

பரி. யோவான் கல்லூரி அணியில் ஆடிக்கொண்டிருக்கும் சஞ்சீவ், விமலன், தயாநேசன் ஆகிய மூவரும் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். இச்சுற்றுப் போட்டியில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பம் இதுவரை இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இறுதிப்போட்டியில் இவாகளின் பங்களிப்பை நிறையவே எதிர்பார்க்கின்றோம். இதுவரை இவர்களின் பந்துத் தடுப்பு சிறப்பாக அமைந்திருந்ததை இங்கு குறிப்பிடவேண்டும்

தொடர்ந்து இவ்விறுதியாட்டம் பற்றி ஜொனியன்ஸ் அணியின் மூத்த உறுப்பினர் சூரியகுமாருடன் கலந்துரையாடினோம். ஆரம்பப்போட்டிகள் 30பந்துபரிமாற்றங்களைக் கொண்டிருக்க இறுதிப்போட்டி மட்டும் 40 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது.

''ஜொலிஸ்ரார் கழகத்தினர் இச் சுற்றுப் போட்டியை பல தடவைகள், குறுகிய காலத்தில் மிகத்திறமையாக ஒழுங்கமைத்து நடாத்திக்கொண்டு வருவது பெரிதும் பாராட்டிற்குரியது. எனது அபிப்பிராயப்படி அரை இறுதி ஆட்டங்களும் 40 பந்துபரிமாற்றங்களைக் கொண்டமைவது சிறப்பாக இருக்குமென்று கருதுகின்றேன். இறுதியாட்டத்துக்கு வருவதற்கான ஒரு பயிற்சியாக மட்டுமன்றி ஒரு மிகத்தரமான போட்டியொன்றின் பின் அணிகள் இரண்டு இறுதியாட்டத்துக்கு வருவதையும் இது உறுதிப்படுத்தும்'' என்றார்.

இம் முறை உங்கள் வெற்றிகளுக்கு சிறப்பாக வழிவகுத்த வீரர்கள் பற்றிக் கூறுங்கள் என்றோம். ''அணித்தலைவர் பரிசித்து ஒரு ஆட்டத்தில் 59 ஓட்டங்களை ஆட்டமிழக்காது எடுத்தார். மகேந்திரராசா ஒரு அரைச்சதம் பெற்றார், காண்டீபன் ஒரு அரைச்சதமும், பின் 35 ஓட்டங்களும் பெற்றுக் கொடுத்தார். பிரசாந்தனின் பந்து வீச்சை இங்கு குறிப்பிடலாம். தமக்குரிய பந்துப் பரிமாற்றங்களில் 11, 14 என்ற மிகக்குறைந்தளவு ஓட்டங்களையே விட்டுக் கொடுத்து பந்து வீசியிருக்கிறார். பீஸ்மனின் விக்கெட் காப்புத் திறமை பெரிதும் அதிகரித்துள்ளதை நன்கு அவதானிக்கலாம். நமது அணியினர் ஒரு சில பிடிகளை விட்டுக் கொடுத்திருந்தாலும், சரியான நேரங்களில் சிறப்பாகச் செயற்பட்டுவெற்றி வாய்ப்பை அதிகரித்துத் தந்திருக்கிறார்கள்'' என்றார்.

இந்த இறுதி ஆட்டம் பற்றிக் கருத்துக் கூறுகையில் ''கடந்த போட்டிகளில் திருப்திகரமான வெற்றிகள் பெற்றதால் அதே நம்பிக்கையுடன்இறுதிப் போட்டியை எதிர்கொள்கின்றோம். காண்டீபன், பிரசாந்தன் இருவரின் திறமையும் சரியாக வெளிப்படுதலை நம்புகிறோம். அவர்கள் எந்தவொரு நிலைமையையும் தமக்குச் சாதகமாக மாற்றக் கூடிய வீரர்கள்'' என்றார்.

சென்றலைட்ஸ் மிகப்பலமானதொரு பந்து வீச்சு அணியினர். இவர்களைச் சமாளிப்பது கஷ்டமானதல்லவா என்று வினவினோம், அதற்கு ''அவர்கள் பலமான பந்து வீச்சு ஆற்றல் கொண்டவர்கள்தான். இதுகுறிப்பாக பூவா, தலையா போட்டுப் பார்ப்பதில்தான் தங்கியுளது நாம் முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினைப் பெற்றால், உயர்ந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள வேண்டும். இது எமது பந்து வீச்சாளர்களை நெருக்கடிக்குள்ளாகாத பந்து வீசும் சூழலுக்கு இட்டுச் செல்லும். இதேவேளை நாம் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டால் சென்றலைட்ஸ் தம் ஆட்டத்தில் அதிக ஓட்டத்தைப் பெறவிடாத வகையில் நாம் அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும், ஏனெனில் திறமையான பந்து வீச்சாளர்கள் எம் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த பல வழிகளிலும் முனைவார்கள்'' என்றார்.

விடைபெறும் பொழுது ஜொனியன்ஸ் அணியினருக்குநல் வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறி விடை பெற்றுக் கொண்டோம்.

## பலமான...

கிறார்கள். இதேவேளை ஜொனியன்ஸ் அணியில் அதே தரத்தில் சூரி இருக்கிறாரே. அவரை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறீர்கள்?

இது ஒரு சிக்கலான கேள்வி. அவர் களத்தில் எடுக்கின்ற சமயோசிதமான முடிவுகளை அவதானித்து, அதற்கேற்றவகையில் தந்திரமான யுக்திகளை கையாளுவோம்.

★ சென்றலைட்ஸ் வல்லமை பொருந்திய அணிதான். ஆனால் இச்சுற்றுப்போட்டியில் உங்கள் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சரிந்தது ஏன்?

இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றோம். இறுதி ஆட்டத்தில் இந்நிலை மாறி எமது மத்திய வரிசை வீரர்கள் முன்மாதிரியான வகையில் ஆடும் துடுப்பாட்ட திறமையை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

★ தனிப்பட்ட வீரர்களின் மெச்சத்தக்க பங்களிப்புப் பற்றி ?

நாங்கள் தனிப்பட்ட செயற்பாடு என்பதை விடுத்து, முழுமையான செயற்பாடு என்பதையே முன்னிலைப்படுத்துகின்றோம். ஒன்றிணைந்த செயற்பாட்டின் வெளிப்பாட்டை அதிதிறமை மிக்க செயற்பாடாகக் கொள்ளுகின்றோம்

★ இன்னொரு விடயம்: ஆரம்ப ஆட்டங்கள் எல்லாம் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டவையாக அமைய இறுதிப் போட்டி மட்டும் 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக அமைகிறதே?

நிச்சயம் இது ஒரு சிக்கலான நிலை. ஆனால் போட்டியிடும் நாம் எந்த சிக்கலையும் எதிர்நோக்கி அதற்கேற்ற அணுகுமுறையில் எதிர்கொள்வதே அணிக்குரிய சிறப்பு. இதற்கு அனுபவம், அனுபவத்தைச் செயற்படுத்தல், திறமை என்பன அவசியம்.

★ ஜொனியன்ஸ் பலமானதொரு துடுப்பாட்ட வரிசையைக் கொண்டவர்களல்லவா? நீங்கள் இச்சவாலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறீர்கள்?

நிச்சயம் திறமையான துடுப்பாட்ட வரிசைதான். ஆனால் கிரிக்கெட் ஆட்டத்தில் தளர்ந்து வீழ்வதும் துடுப்பாட்ட வரிசைதான். எம்மிடம் பல தரப்பட்ட பந்து வீச்சாளர்கள் இருப்பதால் துடுப்பாட்ட வீரருக்கு ஏற்ற வகையில் அவர்களைப் பயன்படுத்துவோம்.

★ பூவா தலையா வென்றால் நீங்கள் என்ன முடிவெடுப்பீர்கள்?

இதைப்பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை.

★ அணி வீரர்களில் ஏதும் மாற்றம் உண்டா?

12-ம் திகதி காலை எமது தெரிவுக் குழுவின் முடிவின்படி இறுதியான அணியினரின் பெயர்கள் வெளியிடப்படும்.

★ நீங்கள் உங்கள் பலமாக எதனை நினைக்கிறீர்கள்?

இளம் இரத்தம் கொண்ட இளம் வீரர்கள் பாடசாலை அணியில், பல்துறைகளில் சிறந்து விளங்கியவர்கள், கடைசி மூச்சுவரை சென்றலைட்சுக்காக தம்மையும் தம் ஆட்டத்தையும் அர்ப்பணிப்பார்கள். ''மத்தியின் கொடி நித்தியம் நிலைக்கும்'' என்ற உணர்வுடன் இறுதிவரை போராடுபவர்கள். இதுவே எம் பலம்.

இவ்வுரையாடலின் போது எம்முடன் உடனிருந்த சென்றலைட்ஸ் மூத்த உறுப்பினர்கள் சாந்திகரன், சண்முகலிங்கம் ஆகியோருடைய அபிப்பிராயங்களைக் கேட்டோம்.

''இரு அணியினரும் பல தடைகளை உடைத்து இறுதிப் போட்டிக்கு வந்துள்ளோம். அன்றைய ஆடுகளத்தின் நிலை, காலநிலை, பூவா தலையா என்பதைப் பொறுத்து, இதற்கமைய திறமைகளைச் சமயோசிதமாகப் பயன்படுத்துவதன் மூலம் வெற்றியை எமதாக்கலாம் என்பது எம் கருத்து. வெற்றிகளைச் சந்திக்கவே களத்தில் இறங்குகிறோம். அதேவேளை வருகின்ற முடிவை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்வோம்,

மைதானம் சிறிதாக இருக்கிறதே. அதேவேளை இது வரை 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டமைந்த ஆட்டம் 40 பந்துப் பரிமாற்றங்களாக மாறுவதை எந்த வகையில் நீங்கள் நோக்குகிறீர்கள்? என்றோம். ''30 பந்துப் பரிமாற்ற ஆட்டங்களில் சில வேளை பலம் குறைந்த அணிகளும் வென்றுவிடும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் 40 பந்துப் பரிமாற்றங்களைச் சரியான முறையில் அணுக திறமையான அணிகளால் தான் முடியும். மேலும் மைதானத்திற்கேற்ப, பந்துவீச வேண்டும் வியூகம் அமைக்க வேண்டும், என்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

நன்றி கூறிய நாம் சென்றலைட்ஸ் கழகத்தை வாழ்த்தி விடை பெற்றோம்.




# 8-ம் ஆண்டுநினைவஞ்சலி

12 06 1994 (ஞாயிறு)

## லெப். அர்ச்சுனா

(ஆர். பி. ஜி.)

(சதாசிவம் தமிழரசுவரன்)



# லெப். அர்ச்சுனா

(சதாசிவம் தமிழரசுவரன்)

46, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

12 06 1994 (ஞாயிறு)

## லெப். அர்ச்சுனா

(ஆர். பி. ஜி.)

## (சதாசிவம் தமிழரசுவரன்)

பெற்ற அன்னையிடம்

04 04 - 1960

பிரபா அண்ணனிடம்

28 - 10 - 1983

மாவீரரிடம்

12 - 06 - 1985

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் -குறள்

காப்பு

ஆத்திசூடியமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோமியாமே

அறஞ்செய விரும்பு. ஆறுவது சினம்.
இயல்வது கரவேல். ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல். ஊக்கமது கைவிடேல்.
எண்ணெழுத் திகழேல். ஏற்பதிகழ்ச்சி
ஐயமிட்டுண்
ஒப்புரவொழுகு. ஓதுவதொழியேல்
ஔவியம் பேசேல். அஃகஞ்சுருக்கேல்

- ஆத்திசூடி

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது -குறள்

(8519)

--- குடும்பத்தினர்

## சிந்தனைக்கு

எல்லாமே வேடிக்கையானதுதான்
அது மற்றவர்களுக்கு நடக்கும் வரையில்
- வில்ரோஜர்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 12-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

## அவமதிப்பு

மேல் மாகாண ஆளுநர் சர்வானந்தா நேற்று முன்தினம் நண்பகல் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் காரணம் எதுவும் கூறப்படாமல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதனைப் பதவி நீக்கம் என்று கூறுவதை விட அவமானகரமான முறையில் சர்வானந்தா தூக்கி வீசப்பட்டார் என்றே கூறவேண்டும்.

இதனை ஆளுநரின் கூற்றுக்களே தெளிவாக உறுதிப்படுத்தின. "எனது பதவிக்குரிய மரியாதையை ஜனாதிபதி விஜேதுங்கா எனக்குக் கொடுக்கவில்லை. ஒரு பியோனுக்கு எழுதுவதுபோல் ஒரு வரியில் உன்னைப் பதவியில் இருந்து தள்ளுகின்றேன்" எனக் குறிப்பிட்டிருந்தார் எனப் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் ஆளுநர் சர்வானந்தா குறிப்பிட்டிருந்தார்,

இதேசமயம், ஆளுநர் சர்வானந்தாவிற்குக் கூட தான் ஏன் பதவியில் இருந்து விலக்கப்படுகின்றேன் என்பதற்கான காரணம் தெரியவில்லை. ஜனாதிபதியின் செயலாளர் பதவி விலகுமாறு கோரியபோது, விலக வேண்டியதற்கான காரணம் என்ன என கேட்டமைக்கு எந்தவித பதிலும் கொடுக்கப்படாமலே, ஜனாதிபதியின் கடிதத்தின் மூலம் ஆளுநர் சர்வானந்தா பதவி நீக்கம் செய்யப்பட்டார். தனது பதவி நீக்கத்திற்கான காரணத்தையே சர்வானந்தாவால் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதேவேளை, காரணம் என ஊகிக்கப்படும் விடயம் பற்றி அவர் கூறுகையில், மேல் மாகாண சபை முதலமைச்சர் கோரிக்கைக்கு இணங்க ஒருவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினேன். அது முதலமைச்சரின் விருப்பத்திற்கேற்ப நடைபெற்றதினால் தன் மீது தவறேதும் இல்லை எனவும் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில், டி. பி. விஜேதுங்காவினால் ஆளுநர் சர்வானந்தா பதவி விலக்கப்பட்டமையானது, அவர் கூறியிருப்பது போல், ஆளுநர் பதவிக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் இழைக்கப்பட்ட அவமரியாதையா? அல்லது ஒட்டுமொத்தமாக மாகாண சபை அமைப்பு முறைக்கே டி. பி. விஜேதுங்கா விடுத்துள்ள எச்சரிக்கையா? என்பதே இன்றுள்ள கேள்வி ஆகும்.

ஏனெனில் ஆளுநர் சர்வானந்தா தூக்கி எறியப்பட்ட முறையானது, ஆளுநர் பதவி எந்தவித அதிகாரமும் அற்ற பதவி என்பதை விட, மத்தியில் ஆளும் கட்சித் தலைவரின் பொம்மையாகச் செயற்படுபவர்களைத் தவிர வேறு எவரும் பதவியில் நிலைக்க முடியாது என்பதையும் வெளிக்காட்டியுள்ளது. குறைந்தபட்

# நீதிபதி பரிசோதித்த பின்பே வீதி துப்புரவாக்கப்பட்டது

## பிரேமா குடும்பத்திடம் தெரிவிப்பு

(கொழும்பு).
நீதிபதியின் பரிசீலனையின் பின்னரே ஆமர் வீதிச் சந்தி துப்புரவாக்கப்பட்டது என பிரேமதாசா குடும்பத்தினரிடம் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட இடமான ஆமர் வீதி சந்தியை நீதிபதியும் நிபுணத்துவமிக்க ஆய்வாளர்களும் பரிசீலனை செய்த பின்பே அந்த இடம் துப்புரவாக்கப்பட்டது. இந்த பரிசோதனையின் பின் அந்த இடத்தை சுற்றிவளைத்து பாதுகாக்க வேண்டிய அவசியமேதுமில்லை அப்படி செய்திருப்பின் பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கும் என பொலிஸ் மா அதிபர் பிராங் டிசில்வா புதன்மாலை பிரேமதாசாவின் குடும்பத்தினரிடம் கூறினார்,

பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா குடும்ப அங்கத்தினர்களை புதன் மாலை விஜயராம மாவத்தையில் உள்ள அவர்களது இல்லத்தில் சந்தித்தார். இவருடன் சி. ஐ. டி பிரதிப் பொலிஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ச, சி. ஐ. டி மேலதிக பிரதி பொலிஸ்மா அதிபர் ஜி; டி செனிவிரட்ண, பொலிஸ் சுப்பிரிண்டன்ற் அசல்லதசநாயக்கா ஆகியோர்களும் கூட சென்றிருந்தனர்

தமது தந்தை கொல்லப்பட்ட இடமான ஆமர் வீதியை அரசு இரசாயன பரிசோதகர், கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி இலங்கையில் அவ்வேளை தங்கியிருந்த ஸ்கொட்லண்ட்யார்ட் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோர் சென்று பார்வையிட்டு பரிசோதிக்க முன் அவ்விடம் ஏன் துப்புரவு செய்யப்பட்டது என பிரேமதாசாவின் மகளான திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி கேட்டார் முதலாவதாக விசாரணையை பொலிசார் ஏன் சி ஐ டியிடம் ஒப்படைக்கவில்லை எனவும் துலாஞ்சலி அப்பொலிஸ் குழுவிடம் கேட்டார் குண்டுவெடிப்பு நடைபெற்ற இடத்தில் நின்ற ரேய்ஞ்ரோவர் வாகனத்தை ஏன் நிபுணர்கள் பரிசோதிக்கவில்லை எனவும் அவர் கேட்டார்

பொலிஸ் விசாரணை குழுவினர் ஏதும் குறைபாடுகளை விட்டிருந்தால் அது பற்றி தற்போது இக்கொலையை விசாரிக்கும் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் என பொலிஸ் அதிபர் பதிலளித்தார்

இக்கொலை பற்றி விசாரிக்க கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு பிரேமா குடும்பத்தினர் கேட்டபோது இவ்வழக்கு நீதிமன்றில் விசாரிக்கப்படுவதால் அது இயலாத காரியம் என பொலிசார் கூறினர் மேலும் விளக்கம் தேவைப்படின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதி பிரேமதாசாவின் குடும்பத்தினரைக் கேட்டுக் கொண்டார்

# ஐ. தே. கவின் எதிர்கால தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா

## டி. பி. விஜேதுங்கா அறிவிப்பு

[கொழும்பு]
ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவர் யார்? என்ற கேள்விக்கு பிரதமர் ரணில்தான் அடுத்த தலைவர் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பதிலளித்துள்ளார்.

அண்மையில் அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொள்ளும்போது கூடிநின்ற மக்கள் அடுத்த ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் காமினி திசாநாயக்காவா அல்லது ரணில் விக்கிரமசிங்காவா என்று கேட்டதற்கு அவர் இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

அண்மையில் தேசியபட்டியல் உறுப்பினராக காமினி திசாநாயக்கா பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஆதரவாளர் இவரை வரவேற்று கோஷம் இடுகையில் "எதிர்கால ஜனாதிபயே, ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால தலைவா" என கோஷம் இட்டமையும் இதனைத்தொடர்ந்து ஜனாதிபதி காமினி திசாநாயக்கா தொடர்பாக சற்று அவதானம் செலுத்துவதே இதற்கு காரணம் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சர்பதவி நீக்கத்திற்கு சந்திரிகாவின் காரணம்

மேல் மாகாண சபை முன்னாள் சுகாதார கடற்தொழில் மகளிர் விவகார அமைச்சர் மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைகள் எதனையும் செய்யவில்லை என்றும் இதனாலேயே இவரை தான் பதவி விலக்கியதாக மேல் மாகாண சபை முதல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேல் மாகாணசபை முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் மக்கள் சேவைக்கு என்று வந்தவர்கள் அதனை சரிவர செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாது விட்டால் மக்கள் பாதிப்பு அடைவார்கள் என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

இவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு மேல் மாகாண சபை பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பனவற்றின் உறுப்பினர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் தன்னிடம் தெரிவித்ததாகவும் இதன் பின்னர் இது தொடர்பாக தான் முழுமையான விபரங்களை பெற்று கொண்ட பின்னர் தான், தான் நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

## பதவி நீக்கியவருக்கு பதில் புதியவர்

# சந்திரிகாவின் முயற்சி பயனளிக்கவில்லை

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மேல் மாகாண அமைச்சர் பதவி விலக்கியதை தொடர்ந்து அப்பதவியை மேற்படி கட்சி உறுப்பினர்களுக்கு வழங்க எடுத்த முயற்சி அந்த உறுப்பினர்களினால் முறியடிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் லலித்குழுவின் ஆதரவாளரான பிரேமரட்ன எதிரி வீர நியமனம் செய்ய மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிகாகுமாரணதுங்க எடுத்த முயற்சி பயன்தரவில்லை எனவும் இதற்கு காரணம் உறுப்பினர்களின் எதிர்ப்பு என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# 25 தமிழ் ஊழியர்கள்

# தீவகத்திலுள்ள படையினர்

## மேல் மாகாணசபை ஆளுநர்;

# பதவி காலியாகும் முன்னரே புதிய ஆளுநர் நியமனம்

(கொழும்பு)
மேல் மாகாணசபை ஆளுநராக பதவி வகித்த எஸ், சர்வானந்தாவிற்கு பதவி நீக்கக் கடிதம் கிடைக்க முன்னரே புதிய ஆளுநருக்கு நியமனம் வழங்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பதவி நீக்கக் கடிதம் எஸ். சர்வானந்தாவிற்குபகல் 1.30 மணியளவில் கிடைத்தது எனவும் ஆனால் புதிய ஆளுநர் நியமனம் பகல் ஒரு மணிக்கே இடம்பெற்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே 30 நிமிடங்களுக்கு ஒரு மாகாண சபைக்கு இரு ஆளுநர்கள் பதவி வகித்தனர் என அரசியல் பார்வையாளர்கள் கூறினர்.

# ஐ. தே. கவுடன் ஒப்பந்தம் செய்வது தவிர்க்கமுடியாது

## ஜீ. எம். பிரேமச்சந்திர தெரிவிப்பு

மேல்மாகாணத்தில் எமக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தத்திற்கு செல்வதை தவிர்க்கமுடியாது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின், தலைவர் ஜீ. எம். பிரேமச்சந்திர தெரிவித்தார்.

பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார.

மேலும் அவர் கூறுகையில் மேல்மாகாணசபை அமைச்சர் பிரேமரட்ணா குணசேகர பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆலோசித்துள்ளது என்றார்,

## தீக்குச்சி

கள் ஆங்காங்கே தூக்கி வீசப்பட்ட நிலையில் அலறிக்கொண்டிருந்தனர். இரத்தம் பீறிட்டுப்பாய்ந்து கொண்டிருந்தது. யாரைப்பார்க்கிறது என்று எனக்குத் தெரியாமல் இருந்தது என்று அவர் தெரிவித்தார்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் காயமடைந்த அனைவரையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## பேராசிரியர்

சிரியர் அ. துரைராசா அவர்கள் இயற்கைஎய்தியதையிட்டு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் தெரிவித்துக்கொள்கிறது. பேராசிரியர் துரைராசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மூன்று நாட்கள் துக்கதினங்களாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ மக்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் இயக்கம் வேண்டியுள்ளது.

இந்த துக்கநாட்களில் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப் படுவதுடன்

மேல் மாகாண சபை முதலமைச்சர் கோரிக்கைக்கு இணங்க ஒருவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினேன். அது முதலமைச்சரின் விருப்பத்திற்கேற்ப நடைபெற்றதினால் தன் மீது தவறேதும் இல்லை எனவும் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில், டி. பி. விஜேதுங்காவினால் ஆளுநர் சர்வானந்தா பதவி விலக்கப்பட்டமையானது, அவர் கூறியிருப்பது போல், ஆளுநர் பதவிக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவால் இழைக்கப்பட்ட அவமரியாதையா? அல்லது ஒட்டுமொத்தமாக மாகாண சபை அமைப்பு முறைக்கே டி. பி. விஜேதுங்கா விடுத்துள்ள எச்சரிக்கையா? என்பதே இன்றுள்ள கேள்வி ஆகும்.

ஏனெனில் ஆளுநர் சர்வானந்தா தூக்கி எறியப்பட்ட முறையானது, ஆளுநர் பதவி எந்தவித அதிகாரமும் அற்ற பதவி என்பதை விட, மத்தியில் ஆளும் கட்சித் தலைவரின் பொம்மையாகச் செயற்படுபவர்களைத் தவிர வேறு எவரும் பதவியில் நிலைக்க முடியாது என்பதையும் வெளிக்காட்டியுள்ளது. குறைந்தபட்சம் மரியாதைக்காகவேனும் விளக்கம் அளிக்கவேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லாத அளவிற்கு அப் பதவி முக்கியத்துவம் அற்றது என்பதே உண்மை நிலையாகும். ஆளுநருக்கே இந்நிலையென்றால் அவரின் மேற்பார்வையில் இருக்கும் மாகாண சபைகளின் அதிகாரங்கள் எத்தகையனவாக இருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இதேசமயம் ஆளுநர் சர்வானந்தா தூக்கியெறியப்பட்ட முறையானது, தனியாக ஒரு அதிகாரமற்ற ஆளுநரைத் தூக்கி எறிதல் என்பது மட்டுமல்ல. ஒரு முன்னாள் நீதியரசரை இழிவுபடுத்தும் செயலாகும். ஆனால் இவ் அவமதிப்புக்கெல்லாம் அதிகாரமற்ற பதவி என்பதற்கு அப்பால், இனத்தால் அவர் தமிழர் என்பதே அடிப்படையாகும். ஏனெனில், கடந்த காலத்திலும் சில ஆளுநர்கள் நிர்ப்பந்தத்தின்பேரில் பதவி விலகவேண்டி வந்திருப்பினும், ஆளுநர் சர்வானந்தா போன்று அவமானப்படுத்தப்படவில்லை. அண்மையில் பதவி விலகிய லேக்ஹவுஸ் பத்திரிகைகளின் நிர்வாகியும், ஆசிரியரும் கூட டி. பி. யை சந்தித்த பின்னரே பதவி விலகினர். இந்நிலையில் ஆளுநருக்கு நடந்தது தமிழர் என்பதற்காக வழங்கப்பட்ட அவமரியாதை என்று கொள்வதில் தப்பில்லை.

ஆனால், இதிலுள்ள கேவலமானதும், அருவருக்கத் தக்கதுமான விடயம் என்னவென்றால், அவமானகரமாக ஒரு தமிழர் தூக்கி எறியப்படும்போது அப்பதவியை நிரப்புவதற்கு வேறொரு தமிழரே தயாராவதும் அப்பதவிக்குப் போட்டியிடுவதுமாகும். இதுதனியாகமேல் மாகாண சபை ஆளுநர் பதவி என்பதில் மட்டுமல்ல, நிதி அமைச்சிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புக்கள் உண்டு எனவும், ஒரு தமிழரின் இடத்தை நிரப்ப சில தமிழரே தம்மைத் தயார் செய்வதாகவும் அறிய முடிகின்றது.

காலத்திற்குக் காலம் தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அதிகாரிகள் கூடவே தமது நலனுக்காகவும், அதிகாரத்திற்காகவும் காட்டிக்கொடுப்புக்களையும், அடிமைகளாக இருந்து உழைப்பதற்கும் தயாராகவே இருக்கின்றனர். சிங்களப் பேரினவாதம் இப் பலவீனங்களைப் பயன்படுத்தி தனது குறிக்கோளை இலகுவிலேயே நிறைவேற்றிக் கொண்டு செல்கின்றது. இந்நிலையில், தமிழ் அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் தன்மானம் உள்ளவர்களாக மாறும்வரை சர்வானந்தா போன்று பல சர்வானந்தாக்களுக்கு இவ்வாறான அவமானங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

---

னால் சுகாதார கடற்றொழில் மகளிர் விவகார அமைச்சர் மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைகள் எதனையும் செய்யவில்லை என்றும் இதனாலேயே இவரைதான் பதவி விலக்கியதாக மேல் மாகாண சபை முதல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேல் மாகாணசபை முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவிக்கையில் மக்கள் சேவைக்கு என்று வந்தவர் வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாது விட்டால் மக்கள் பாதிப்பு அடைவார்கள் என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

இவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு மேல் மாகாண சபை பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பனவற்றின் உறுப்பினர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் தன்னிடம் தெரிவித்ததாகவும் இதன் பின்னர் இது தொடர்பாக தான் முழுமையான விபரங்களை பெற்றுக்கொண்ட பின்னர் தான், தான் நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

---

திசாநாயக்கா பாராளுமன் விக்கின்றன.

## பதவி நீக்கியவருக்கு பதில் புதியவர்

# சந்திரிகாவின் முயற்சி பயனளிக்கவில்லை

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மேல்மாகாண அமைச்சர் பதவி விலக்கியதை தொடர்ந்து அப்பதவியை மேற்படி கட்சி உறுப்பினர்களுக்கு வழங்க எடுத்த முயற்சி அந்த உறுப்பினர்களினால் முறியடிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் லலித்குழுவின் ஆதரவாளரான பிரேமரட்ன எதிரிவீர நியமனம் செய்ய மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிகாகுமாரணதுங்க எடுத்த முயற்சி பயன்தரவில்லை எனவும் இதற்கு காரணம் உறுப்பினர்களின் எதிர்ப்பு என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

---

வரையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார். (க)

---

# தீவகத்திலுள்ள படையினர் உசார் நிலையில் வைப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் நடக்கலாம் என்பதால் தீவகப் பகுதி இராணுவத்தினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஏழாம் திகதி காரைநகர் இராணுவ முகாம் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரக் கண்ணி வெடித்தாக்குதலின் போது கடற்படையின் பவுசர் சிக்கிச் சிதறியது தெரிந்ததே.

இதனை அடுத்து அப் பகுதிகளில் மேலும் தாக்குதல்கள் புலிகளால் நடாத்தப்படலாம் என அஞ்சியே அனைத்து படையினரையும் உசார் நிலையில் இருக்குமாறு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாம். இதனை அடுத்து அனைத்து தீவக படையினரும் இருபத்தி நான்கு மணிநேரமும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

# 25 தமிழ் ஊழியர்கள் திடீர் வேலை நீக்கம்

(கொழும்பு)

நுவரேலிய மாநகரசபையில் மழையை காரணம் காட்டி சில தமிழ் ஊழியர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது, இவ்வாறு 25 தமிழ் ஊழியர்களின் வேலையை அம்மாநகரசபை இடைநிறுத்தியுள்ளது.

மாநகரசபையில் 40 சமயா சமய ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 12 பேர் சிங்களவர்கள். 28 பேர் தமிழர்கள். 12 பேருக்கும் வேலை வழங்கப்பட்டுள்ள அதே வேளை 25 தமிழ் ஊழியர்களின் வேலையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மழையை காரணம் காட்டியே இவ்விதம் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான இனப்பாகுபாட்டை தடுத்து நிறுத்துமாறு மாநகரசபையின் துணை மேயர் விவேகானந்தன் மாகாண முதலமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் அவசர தந்திகளை அனுப்பிவைத்துள்ளார்.

---

# நிலுவைகளை உறுதிசெய்ய கூட்டுறவு சங்கங்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கணக்கின் நிலுவையை உறுதி செய்யும்படி. கோரி புனர்வாழ்வுப் பகுதியினர் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

31-05-94ஆம்திகதி வரையான கணக்குகளை சீர்செய்வதில் உடனடியாக கவனம் எடுக்கும்படி அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கணக்கின் நிலுவையை சீர் செய்வதன் மூலம் புனர்வாழ்வுப் பகுதியினருக்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலான கணக்கு வழக்குச் சிக்கல் தீரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் உள்ள இருபத்தியொரு கூட்டுறவுச் சங்கங்கள் புனர்வாழ்வுப் பகுதிக்கு 37 மில்லியன் (3.7 கோடி) ரூபாய் கடன் செலுத்த வேண்டியுள்ளது என்றும் சங்கங்களால் கையளிக்கப்பட்ட காசோலைகள் பல வங்கிகளில் இடப்பட்டபோது அவை திரும்பியுள்ளன என்றும் யாழ் புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்திருந்தனர்.

இதற்குப்பதிலளிக்குமாப் போல 31-03-1993 திகதிக்குப்பின்னர் யாழ்புனர்வாழ்வுப்பகுதியினர் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சீர் செய்வதில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றனர் என்று கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் புனர்வாழ்வுப் பகுதியினரிடம் உள்ள கணக்குகளை சீர் செய்வதில் உடனடியாக கவனமெடுக்கும் படி கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தி, பா)

---

## அரசை

16 பேரும் தாம் குற்றவாளிகளல்ல எனக் கூறினர். இவ் வழக்கில் பாணந்துறை இன்ஸ்பெக்டர் சாட்சியமளிக்கையில் 27-2-92 இல் நான் வாதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றினேன் அன்றையதினம் ஜே. வி. பி. இரகசிய கூட்டம் நடத்துவதாக எனக்குத் தகவல் கிடைத்தது. அதன்படி நான் அங்கு சென்றபோது இவர்கள் கைதாகினர் என்றார்.

---

## இராணுவ

இதேவேளை பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்த்தனவின் கையொப்பத்துடன் பாதுகாப்பு அடையாள அட்டைகளை கிராமசேவகர்கள் வழங்கி வருகின்றனர். தேசிய அடையாள அட்டை இல்லாதோர்க்கு வர்ண புகைப்படத்துடனும் தேசிய அடையாள அட்டை உள்ளோருக்கு கறுப்பு வெள்ளை புகைப்படத்துடனும் அடையாள அட்டை வழங்கப்படுகின்றது

இவ்வேளை மட்டக்களப்பு நகர சோதனை சாவடிகளில் கடந்த ஓரிரு தினங்களாக சோதனைகள் தீவிரமாகியுள்ளன. தலைமுதல் கால் வரை சோதிக்கப்படுகிறது. வாகனங்களில் மூடைகள் பொருட்கள் கிழிறக்கப்பட்டு சோதனையிடப்படுகிறது. இச் சோதனை நடவடிக்கையில் பொலிஸ் இராணுவத்தினருடன் சி, வி.எப். எனும் மக்கள் தொண்டர் படையும் சோதனை நடத்தி வருகின்றனர்.

---

## கணனி செய்முறை

முதற் தடவையாக யாழ். தொழிநுட்பக் கல்லூரியில் 'உயர் வணிகத் தகுதித் தேர்வுப் பயிற்சி' நெறிக்கு 'கம்யூட்டர்கள்' (கணனிகள் செய்முறை பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம்காலை 10-00மணிக்குஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரியின் உப அதிபர் திரு. எம். ஸ்ரீவிக்கினேஸ்வரன் கணனியை இயக்கி வைத்து பயிற்சியினை தொடக்கி வைத்தார்.

## முதலிடம் பெற்றன

(தொல்புரம்)

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போடிகளில் பங்குபற்றிய 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் சண்டிலிப்பாய் மகாவித்தியாலயமும், 19 வயதுகுட்பட்டோர் பிரிவில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையும் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டன. (41)

---

## பேராசிரியர்

சிரியர் அ. துரைராசா அவர்கள் இயற்கைஎய்தியதையிட்டு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் தெரிவித்துக்கொள்கிறது. பேராசிரியர் துரைராசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மூன்று நாட்கள் துக்கதினங்களாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ மக்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் இயக்கம் வேண்டியுளது.

இந்த துக்கநாட்களில் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப் படுவதுடன் அனைத்து அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் கறுப்புக் கொடிகளை ஏற்றி அன்னாருக்கு நினைவஞ்சலி செலுத்துமாறு அனைவரையும்கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிநாளன்று அனைத்து வர்த்தக நிறுவனங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுநிறுவனங்கள் யாவையும் கதவடைப்புச் செய்து மறைந்த பேராசிரியர் அவர்களுக்கு பூரண அஞ்சலி செலுத்துமாறு மக்களைக் கோருகின்றோம். அன்றைய தினத்தில் அன்னாருக்கு நினைவஞ்சலிக் கூட்டமொன்றும் ஒழுங்கு செய்ய ஏற்பாடாகியுள்ளது.

பேராசிரியர் துரைராசா அவர்கள் இன்று (11-06-94) கொழும்பில் காலமானார். அவர் கடந்த சில வாரமாக நோய் வாய்ப்பட்டிருந்தார் என்பது மக்கள் அறிந்ததே. பேராசிரியர் அவர்கள் இவ் வருடம் மார்ச் 31ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய காலத்தில் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும்பணி புரிந்தார். மிகவும் நெருக்கடியான யுத்த காலத்தில் அரச தடைகளுக்கும் மத்தியில் நாட்டுப் பற்றுடன் உயர் கல்வியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவை மகத்தானது. அவரது சேவையைப் பாராட்டி கல்வி நிறுவனங்களும் பொதுமக்களும் பெரியளவில் புகழாரம் செலுத்தியது தெரிந்ததே எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் எமது தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்களிடம் பேராசிரியரைக் கௌரவித்து விருது வழங்கி அவரது சேவையைப் பாராட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசதுரை பத்மாவதி

திருமதி பத்மாவதி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும் நல்லநாதன் அவர்களின் அருமைச் சகோதரியும் பத்மநாதன் (இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாணம்). இராசசிங்கம் (ஜேர்மனி). செல்லத்துரை (விஜிதா மில் உரிமையாளர்), ஸ்ரீ ராதாகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோன்மணி, யோகராணி (ஜேர்மனி). கமலாம்பிகை, யோகம்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுசா, அனுராஜ், காந்தராஜ், கவிதா, பிரமிளா, மயூரன், றஜித்தா, கிரிதரன், நிசாந்தினி, (ஜேர்மனி), தனேஷ்குமார், விஜிதா. சதீஸ்குமார். பிரகாஷ்குமார், தனுசிக்கா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-6-94 இன்று பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரினது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

24/1, விதானையார் வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

இ. பத்மநாதன்,
இ. செல்லத்துரை
(மக்கள்)

[சி-9654]

### செல்வன் செல்வஜோதி ரகுபதி

செல்வன் ரகுபதி 11 - 6 - 1994 அன்று காலமாகிவிட்டார். அன்னார் செல்வஜோதி கலா தம்பதிகளின் அன்பு மகனும், வாமதியின் சகோதரனும், வேலும் மயிலும் தம்பதிகளின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12 - 6 - 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

63, வில்லியம் வீதி.
நாவாந்துறை.

வே. செல்வஜோதி
(தந்தை)

(8536)

### கந்தையா பாலாமணி

கீரிமலையைச் சேர்ந்த கந்தையா பாலாமணி 11-6-94-ல் கிளிநொச்சியில் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியை அங்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் 12-6-94 ஞாயிறு யாழ்ப்பாணம் கமால் வீதி, இல. 471-ல் உள்ள அவரின் மூத்த மகள் வீட்டில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

ந. சுப்பிரமணியம் J. P.
மருமகன்.

(8537)

யாழ். பல்கலைக்கழக முன்னை நாள்

# கூரே- லக்கி அல்கம இரகசியச் சந்திப்பு

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரேக்கும் இராணுவ தலைமை அலுவலக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவிற்கும் இடையே இரகசிய சந்திப்பு ஒன்று நடைபெற்றதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அமைச்சரின் வீட்டில் இச் சந்திப்பு நடைபெற்றதாகவும், இச் சந்திப்பு சில மணி நேரம் நீடித்ததாகவும் மிகவும் நட்பு ரீதியில் பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் இச் சந்திப்பில் இவ் இருவரின் உதவியாளர்கள் கூட இருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் அவ் வட்டாரங்களில் மேலும் பேசப்படுகின்றது.

அமைச்சர் சிறிசேன கூரே ஐக்கியதேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஆட்சிக்கு மறைமுகமாக ஒத்துழையாமை தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இராணுவ தலைமையின் அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணவின் பதவி விலகலைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் சிறிது மனத்தாங்கலுடன் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

(நி), (க)


நீர்ப்பாசன
தொழில்நுட்பவியலாளர்கள்
உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் வேண்டும்,

★ நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
★ நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
★ நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
★ நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்,

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் 16 - 6 - 94 அல்லது வெள்ளி 17 - 6 - 94 காலை 10 மணிக்கு

கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்


> பொருளைக் கொடுத்து புருஷனை வாங்கும்
> புத்தி கெட்ட மாந்தரே, கேளீர் -- சீதன
> இருளை விரட்டி இல்லறத்தேரை இருவரும்
> இழுப்போம் வாரீர்.

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான நிபந்தனைகளில் மாற்றமில்லை

-விமல் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புலிகள் மீது நம்பிக்கை வைத்து பேசினோம் ஆனால் நாம் ஏமாற்றப்பட்டோம். எனவே தான் இப்பொழுது புலிகளுடன் பேச நிபந்தனைகள் இடுகிறோம் என பாராளுமன்ற விவகார அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளு — இனி நாம் பேசுவதாயின் பிரபாகரனே முன்வர வேண்டும். வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண இரு வழி உண்டு. ஒன்று யுத்தம்; மற்றையது அரசியல்தீர்வு. யுத்த மூலமான தீர்வு என்பது அனைவரையும் கொன்று குவிப்பதல்ல. புலிகளை பலமிழக்கச் செய்வதாகும். அரசியல் தீர்வு குறித்தும் அரசு தெளிவுபடுத்தியுள்ளது. அரசியல் தீர்வில் நம்பிக்கை வைத்தே நாம் முன் புலிகளுடன் பேசினோம். ஆனால் புலிகள் எம்மை ஏமாற்றி விட்டனர். பேச்சுக்கு வருவன்தாயின் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டும். இது முக்கிய நிபந்தனை. பேச பிரபாகரனே நேரில் வர வேண்டும். பிரபாகரனின் பிரதிநிதியுடன் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனைய சிறுபான்மை கட்சிகளையும் பேச்சுக்கு அனுமதிக்க வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வில் சுதந்திரக் கட்சிக்கு அக்கறை இல்லை. அக்கறை இருப்பின் அக் கட்சி தனது கொள்கையை பகிரங்கப்படுத்தட்டும் என சவால் விடுகிறேன். ஒளிவுமறைவு கூடாது என அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா மேலும்தெரிவித்தார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-06-12**
**ஞாயிறு இரவு**

08-01 - இசையரங்கம் - நிகழ்ச்சியில் பாடுபவர் சாரதா - சச்சிதானந்தம்
08-20 - சிறப்பு நிகழ்ச்சி - ''வரலாற்றுப் பாதையில் சிறிலங்கா அரசினை இனம் காட்டிக் கொண்ட கொக்கட்டிச்சோலை படுகொலைகள்''
08-30 - செய்திகள்
08-40 - தொடர் நாடகம் இலங்கை மண் 27-ம் அங்கம்

**1994-06-13**
**திங்கள் காலை**

07-02 - மாவீரவணக்கம்
07-15 - மணியாரம்
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - தாயகப் பாடல்கள்

# சினைப்பர் தாக்குதலுக்கு மாணவன் பலியானார்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பகுதியில் கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் வசாவிளான் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் இரத்தினசோதி கீதாராகவன் (வயது 19) பலியானார்.

இப்பகுதியில் இவர் குழை வெட்டச் சென்றபோதே இச் சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)


யாழ். ஸ்ரீதரில்
புரூஸ்லி நடித்த
GAME OF DEATH
தினசரி
பிற்பகல் 4.00மணி 6.00மணி
சனி ஞாயிறு
காலை 10. 30 மணி
பிற்பகல் 4.00 மணி 6.00மணி
(சி- 9570)


### சிறிசேனவிற்கு புதிய பதவி

ஐ. தே. க. தேசியபட்டியல் எம். பி. பதவியில் இருந்து இராஜினாமா செய்த ஆர். ஏ. டி. சிறிசேனா தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உ
சிவமயம்

## கந்தையா பாலாமணி

கீரிமலையைச் சேர்ந்த கந்தையா பாலாமணி 11-6-94-ல் கிளிநொச்சியில் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியை அங்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் 12-6-94 ஞாயிறு யாழ்ப்பாணம் கமால் வீதி, இல. 471-ல் உள்ள அவரின் மூத்த மகள் வீட்டில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

**ந. சுப்பிரமணியம் J. P.**
மருமகன்.

(8537)

---

★ நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்,

**உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் 16 - 6 - 94 அல்லது வெள்ளி 17 - 6 - 94 காலை 10 மணிக்கு**

கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**உட்கட்டுமானப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய**
**மேம்பாட்டு நிறுவனம்**

**இல. 10, செம்பியன் வீதி,**
**கொக்குவில்.**

(சி-9649)

---

கட்டிச்சோலை படுகொலைகள்''
08-30 - செய்திகள்
08-40 - தொடர் நாடகம் இலங்கை மண் 27-ம் அங்கம்

**1994-06-13**
**திங்கள் காலை**

07-02 - மாவீரவணக்கம்
07-15 - மணியாரம்
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - தாயகப் பாடல்கள்

---

## யாழ். ஸ்ரீதரில்

**புரூஸ்லி நடித்த**
**GAME OF DEATH**

**தினசரி**
பிற்பகல் 4.00மணி 6.00மணி

**சனி ஞாயிறு**
காலை 10. 30 மணி
பிற்பகல் 4.00 மணி 6.00மணி

(சி- 9570)

---

19) பலியானார்.

இப்பகுதியில் இவர் குழை வெட்டச் சென்றபோதே இச் சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)

## சிறிசேனவிற்கு புதிய பதவி

ஐ. தே. க. தேசியபட்டியல் எம். பி. பதவியில் இருந்து இராஜினாமா செய்த ஆர். ஏ. டி. சிறிசேனா தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**யாழ். பல்கலைக்கழக முன்னை நாள் உபவேந்தர்**

**கலாநிதி துரைராசா**
**அவர்கட்கு**

## எமது இதய அஞ்சலி

★ எம் பல்கலைக் கழகத்தின் தன்னிகரற்ற துணைவேந்தராய் எம் மாணவமணிகளின் உயர் கல்வி பரந்து விரிந்து மேன்மையுற ஒய்வு உறக்கமின்றித் திரிகரண சுத்தியுடன் உழைத்த உத்தமனே! உயர்ந்தவனே! உபவேந்தே! உம் மறைவால் பெரிதும் நலிந்துள்ளோம்.

★ சிந்தை குளிரச் சிரித்தொழுகும் நின்முகத்தை எந்தை நாள் காண்போமினி.

★ எம் நெஞ்சிருக்கும் வரை நினைவிலிருப்பீர் ஐயா!

அன்னாரின் பாரியார் அவர்கட்கும் அருந்தவப் புத்திரர்கட்கும் எமது உளம் நெகிழ் அனுதாபங்கள்!

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
**யாழ் மாவட்டம்**

[சி-9653]

---

## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

**யாழ் மாவட்டம்**

யாழ். பல்கலைக்கழக முன்னை நாள் உபவேந்தர் கலாநிதி துரைராசா அவர்களின் மறைவை யொட்டி இன்று 12/06/94 ஞாயிற்றுக்கிழமை அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி அன்னாருக்கு இதய அஞ்சலியைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பொதுச் செயலாளர்**
**யாழ் மாவட்டம்**

(சி/ 9652)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

நிகழும் பவ வருடம் வைகாசித் திங்கள் 30 ஆம் நாள் (13-06-94) திங்கட்கிழமை முற்பகல் 10.48 முதல் 01.12 வரையுள்ள சிங்க லக்கின சுப முகூர்த்த வேளையில்,

| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
|---|---|
| **ஜெயச்சந்திரகாந்தன் (காந்தன்)** | **தயாழினி (தயா)** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு ஸ்ரீ கலட்டி சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| திரு. திருமதி இராசலிங்கம் | திரு. திருமதி கனகசிங்கம் |
| குடும்பத்தினர் | குடும்பத்தினர் |
| இல 16 காரைக்காட்டு லேன் | ஞானபாஸ்கரசங்க வீதி, |
| வண்ணார்பண்ணை, | கல்வியங்காடு, |
| யாழ்ப்பாணம். | நல்லூர் |

குறிப்பு: சிறப்பு வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் (15-06-94) புதன் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்

(8527)

---

சீமாட்டி ——> பெயர் மாற்றம்

# திருமாட்டி புடைவைக் கடல்

**122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**தலைநகரில் முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் கைராசியான முன்னோடிகள்** (சி-9603)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.